39. எண்பதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா ………………………………………

40. முப்பதாவது ஆண்டின் நிறைவில் கொண்டாடப்படும் விழா ………………………………………

41. பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி ……………………………………………………

42. நூறு ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி ……………………………………………………

42. கடவுள் இல்லையென்று வாதிடுபவன் ……………………………………………………..

43. கடவுள் உண்டு என்று வாதிடுபவன் ……………………………………………………

44. வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன் ……………………………………………………..

45. வழக்கைத் தாக்கல் செய்பவன் ……………………………………………………..

**பின்வரும் விடுகதைகளுக்குரிய விடைகளை கட்டத்தில் இருந்து தெரிந்து எழுதுக.**

| |
|---|
| **புல்லாங்குழல், கடிதம் ,கத்தரிக்கோல், தேங்காய் அன்னாசி, உப்பு , கண் இமை, நிழல் வெங்காயம், ஊதுவர்த்தி புகை, கல்வி , கண்ணாடி, கடிகார மட்கள், நாற்காலி, தேன் கூடு, கண்ணீர், தையயல் ஊசி, ஆர்மோனியப் பெடட்டி, தும்புத்தடி, மூக்குகக் கண்ணாடி, நீர்க்கமிழி, வானொலிப் பெட்டி** |

1. வெள்ளத்தாலும் போகாது. வெண்தணலிலும் வேகாது.கொள்ளையடிக்கவும் முடியாது. கொடுத்தாலும் குறையாது. அது என்ன?
2. காற்று நுழைந்ததும் கானம் பாடுவாள். அவள் யார்?
3. தனித்தும் உண்ண முடியாது. இது சேராவிட்டாலும்உண்ண முடியாது. அது என்ன?
4. வெட்டிக் கொள்வான். ஆனாலும் ஒட்டிக் கொள்வான்அவன் யார்?
5. ஒட்டியவன் ஒருவன், பிரித்தவன் இன்னொருவன்.அது என்ன?
6. ஏற்றி வைத்து அணைத்தால், எரியும் வரை மணக்கும் அது என்ன?
7. தலையிலே கிரீடம் வைத்த தங்கப் பழம். அது என்ன?
8. தலைக்குள் கண்கள் வைத்திருப்பவன், இவன் மட்டும தான். அவன் யார்?
9. கண்ணால் பார்க்கலாம். ஆனால் கைகளால் பிடிக்கமுடியாது. அது என்ன?
10. யாரும் தயாரிக்காத கதவு தானே திறந்து தானே மூடும்.அது என்ன?
11. அடிக்கமாட்டான். திட்டமாட்டான். ஆனால் கண்ணீரைவரவழைப்பான். அவன் யார்?
12. கண்ணில் தென்படும் கையில் பிடிபடாது. அது என்ன?
13. உலகமெல்லாம் உறங்கிவிடும் ஆனால் இவர்கள் மட்டும் உறங்கமாட்டார்கள்
14. நான்கு கால்கள் கொண்டவன் ஆனால் அவனுக்கு வால் கிடையாது அவன் யார்?
15. பாடுவான் ஆடமாட்டான் பேசுவானன் அசையமாட்டான் அவன் யார்?
16. உலகில் மெலிந்தவன் உடைகளைக் காப்பவன் அவன் யார்?
17. சின்னப் பெட்டிக்குள் கீதங்கள் ஆயிரம் ஆயிரம் அது என்ன?
18. மெலிதாய் இரக்கும் தண்ணீரில் மிதக்கும் ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அதனைனத் தூக்க முடியாது அது என்ன?
19. மரத்தில் தொங்கும் இரும்புப் பெட்டகத்துள் காவலர்களே அதிகமாம் அது என்ன?
20. முகத்தைக் காட்டுவான் முதுகைக் காட்டமாட்டான் அவன் யார்?
21. கண்ணுக்கு அலங்காரம் பார்வைக்கு உத்தரவாதம் அது என்ன?
22. ஓடையிலே ஓடாத நீர் ஒருவரும் குடிக்காத நீர் அது என்ன?
23. கடல் நீரால் வளர்வான் மழை நீரால் மறைவான் அவன் யார்?
24. விடிந்தவுடன் வேலை செய்வான் வேலை இல்லையேல் மூலையில் கிடப்பான் அவன் யார்?

❖ பின்வரும் சுருக்கக் குறியீடுகளுக்குரிய விரிவாக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக

1. கி.மு ……………………………
2. கி.பி. ……………………………
3. பி.ப ……………………………
4. மு.ப ……………………….……
5. இ.ம.வ ………………………
6. இ.ம.ச ……………….………
7. இ.ஒ.கூ ………………………
8 இ.பெ.கூ ……………………
9. ம.ப.பா. ………………….…….…………
10. தே.க.நி. …………………...…………
11. ப.நோ.கூ.ச ………………..……….……….
12. வெ.நோ.பி. ………………..……………
13.. இ.ம.வ ………………..….…………
14.. இ.போ.ச …………………………………
15. பா.ம.க ……………………………….....
16. அ.ப ………………………………..

❖ பின்வரும் குறியீடுகளுக்குரிய கருத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக

1) 


2) 



……………………… …….. ……………….………… ……………………………

4) 


5) 

6) 

…………………………. …………………………… ………………………….


7) 

8) 


9) 


……………………………..   ……………………………   ……………………………….

10) 


11)) 


12) 

………………………..   …………………………………….   ……………………………..

13) 

14 ) 


15) 


…………………………..   …………………………..   ……………………………….

16)) 

17) 

18) 

- **தரப்பபடுகின்றவற்றுக்குப் பொருரத்தமானன மொழிவடிவத்தை தெரிந்து எழுதக.**

**( அறிவித்தல், அறிவுறுத்தல், கட்டடளை )**

1) கூட்டுறவுக் கடை காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை திறந்திருக்கும். ( )

2) வீதியைக் கடக்கும்போது வலப்பக்கமாகவும் இடப்பக்கமாகவும் பார்த்து மீண்டும் வலப்பக்கமாகப் பார்த்து மஞ்சள்∴ வெள்ளைக் கோட்டினூடாகக்கடக்க வேண்டும். ( )

3) விசேட வைத்திய நிபுணரைச் சந்திக்க விரும்புவோர் காலை ஏழு மணிக்குமுன்னர் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும். ( )

4) பல்பொருள் அங்காடிக்குள் செல்லும் முன் நீங்கள் கொண்டு வந்த பொருட்களைப் பொருள் பாதுகாப்பாளரிடம் கொடுத்துவிட்டு உள்ளே செல்லுங்கள். ( )

5) இடி, மின்னல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டாம்.

6) வைத்தியசாலைக்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. ( )

7) பேருந்தில் பயணச்சீட்டின்றிப் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ( )

8) நித்திரை கொள்ளும்போது கைப்பேசியைத் தலையணைக்கு அருகில் வைக்க வேண்டாம். ( )

9) பேருந்தில் பயணிக்கும் பயணிகள் பயணச்சீட்டைப் பெறாவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும். ( )

10) பலதுக்கிய பினன்ர் பற் தூரிகையைப் பற்தூரிகைப் பெட்டிக்குள் வையுங்கள் ( )

11) இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன எல்லா வினாக்களுக்குமுரிய விடையை வினாத்தாளிலேயே எழுதுக ( )

12) மாணவர் மன்றக் கூட்டம் எதிர் வரும் மாதம் இரண்டாம் வாரத்தில் இடம்பெறும் ( )

13) தவணைப் பரீட்சைக்கான கட்டணங்களை எதிர்வரும் வாரத்துக்குள் செலுத்தவும் ( )

14) சோடிச் சொற்களுகக்குரிய உருவைத் தெரிவு செய்க ( )

15) 10ஆம் வினா தொடக்கம் 20வது வினாவரைக்குமான விடைகளைத் தெரிந்து கோடிடுக ( )

16) உணவு உண்டபின்னர் பீங்கான் கோப்பை போன்றவற்றை இடது புறத்தில் உள்ள தட்டில் வையுங்கள். ( )

17) பொலித்தீன், பிளாஸ்திக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ( )

18) கண்ட இடங்களில் குப்பைகளை இடுவதைத் தவிர்க்கவும். ( )

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| |
|---|
| **நான் ஒரு மருத்துவர் நான் தயாரிக்கும் மருந்து மிகவும் இனிமையானது இதனை நூற்றுக்கு மேற்பட்ட நோய்களுக்குப் பயன்படுத்தலாம்.இதனை வேறு எவராலும் உற்பத்தி செய்யமுடியாது, நாங்கள் மலைகளிலும் மரங்களிலும் வீடுகளிலும் எங்களது வாழ்விடங்களை அமைக்கின்றோம். ஒரு துளி பானத்தை உருவாக்க மிகவும் சிரமப்படுகின்றோம் ஆதலால் நீங்கள் எங்களைத் துன்புறுத்தக் கூடாது.** |

1) இங்கு தன்னைப் பற்றிக் கூறும் உயிரினம் எது? ……………………………………………

2) 'பிணி' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக ……………………………………………

3) 'மடு' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லைப் பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக ……….……………

4) பந்தியிலுள்ள உயர்திணைப் படர்க்கைப் பன்னைமைச் சொல் எது? ……………………………….

5) இதிலுள்ள இடப் பெயர் ஒன்றை எழுதுக …………………………………………………..

6) பந்தியிலுள்ள உயர்திணை முன்னிலைப் பன்மைச் சொல் எது? ……………………………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| |
|---|
| **இன்று உலகளாவிய ரீதியில் பிளாஸ்டிக்,பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளது பிளாஸ்டிக்கைத் தமிழில் "நெகிழி' என்பர். இவை பன்முகப் பாவனை உடையவை. மலிவானவை, நீண்டகாலம் பாவிக்கக் கூடியவை. இவை போன்ற காரணங்களால் அதிகமானோர் பயன்படுத்தகின்றனர். இதனால் சூழல் வெகுவாக மாசடைகின்றது. இதுமட்டுமன்றி பொலித்தீன்களை தாம் உண்ணும் உணவுகளோடு மிருகங்களும் பறவைகளும் சேர்த்து உண்பதால் இவை அழிவடைந்து வருகின்றன. இவற்றை எரிப்பதால் சூழல் மாசடைந்து 'ஓசோன்' படலமும் பாதிப்படைகின்றது.ஆகவே நாம் வாழும் சூழலை பொலித்தீன், பிளாஸ்டிக் அற்றதாக பாதகாப்பது எமது கடமையாகும்.** |

1) **'ஆகாரம்'** என்பதன் ஒத்த கரத்துச் சொல் எது? ……………………………………………

2) பிளாஸ்டிக்கைத் தமிழில் எவ்வாறு அழைப்பர்? ……………………………………………

3) பந்தியிலுள்ள அ∴றிணைப் படர்க்கைப் பன்னைமைச் சொல் எது? ……..…………..…………………

4) இதிலுள்ள இடப் பெயர் ஒன்றை எழுதுக …………………………………………..

5) பாதிப்டைகின்றன என்பதனைப் பரித்து எழுதுக? ……………………….………………

6) பொலித்தீனை மக்கள் என் விரும்பிப் பாவிக்கின்றனர்? ……………………..………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| |
|---|
| **திருக்குறளானது தமிழில் வெளிவந்த உலகப் புகழ் பெற்ற அறநூல் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். இது பத்து அதிகாரங்களில் 1330 குறள் பாக்களைக் கொண்டது. திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகின்றது.திருக்குறள் கூறும் கருத்துக்கள் இதிகாசக் கதைகள் ஊடாகக் கூறப்பட்டுள்ளன.இதில் நன்றி மறவாமை,பொறுமையுடைமை,வாய்மை போன்றவை சிறப்புடையவை. ஆகவே நாமும் திருக்குறள் கூறம் நல்ல கருத்துக்களைப் பின்பற்றி இளமையிலேயே உயர்ந்த வாழ்வைப் பெறுவோம்.** |

1) **'கீர்த்தி'** என்பதன் ஒத்த கரத்துச் சொல் எது? ……………………………………………

2) **இளமை** என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக ………………….……………….……

3) கதை என்பதன் பன்மை வடிவத்தினை எழுதக …….………………..……………….

4) பந்தியில் உள்ள பெயரடை ஒன்றை எழுதுக ……………………………………………

5) பந்தியில் உள்ள உயர்திணைத் தன்மைப் பன்மை எதிர் கால வினைமுற்று எது? ………………………

6) பொறுமை + உடைமை என்பதசை சேர்த்து எழுதுக ……………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

முன்னய காலத்துப் பொழுது போக்குகள், விளையாட்டுக்கள் என்பன மனித வாழ்க்கையுடனும் பண்பாட்டுனும் இணைந்ததாக இருந்தன. முன்பு பெரு வழக்கில் இருந்த உச்சரிப்பு விளையாட்டுகளாக இவடம் எவடம், கீச்சு மாச்சுத் தம்பலம், குலைகுலையாய் முந்திரிக்காய்,கிட்டிப்புள்ளு , கிள்ளுப் பிராண்டி, கெந்தியடித்தல், ஒளித்துப் பிடித்து விளையாடுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.இவ்விளையாட்டுக்கள் மூலம் உடல் உறுதியும் அறிவுத் திறனும் , மகிழ்வும், கூட்டுறவும் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1) ‘**திண்ணம்**’ என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ………………………………………

2) பந்தியில் உள்ள உயர்திணைப் படர்க்கை ஒருமைச் சொல் எது? ………………………………

3) இங்கு உள்ள அடுக்குத் தொடர் யாது? ………………………………………

4) **இருந்தன** என்பதன் ஒருமை வடிவத்தினை எழுதுக ………………………………………

5) முன்னய காலத்து விளையாட்டுகள் எவற்றோடு இணைந்தன? ………………………………………

6) விளையாட்டுகள் மூலம் எவை ஏற்படுகின்றன? ………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

இயற்கை எழில் கொஞ்சும் நகரமே கண்டி மாநகரமாகும். இங்கு ஆண்டுக்கு ஒரு தடவை ஆடி மாதத்தில் ‘எசல பெரஹரா’ இடம்பெறும்.தகதகவென மின்னும் தங்கக் கூரையை உடைய தலதா மாளிகை வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு பௌத்த விகாரை ஆகும்.இங்கே புத்தரின் புனித தந்தம் வெகு கௌரவமாகப் பேணிப் பாதுகாக்கப்படுகினன்றது. பெரஹரா ஊர்வலத்தில் பல்வேறு கலாசார நடன நிகழ்வுகள் இடம்பெறுவது தனியழகுதான். இவை கண்களுக்கு விருந்தளிக்கின்றமை சிறப்பாகும்.

1) ‘**அழகு**’ என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ………………………………………

2) பந்தியில் உள்ள சினைப் பெயர் யாது? ………………………………………

3) இங்கு உள்ள இரட்டைக் கிளவி யாது? ………………………………………

4) இதில் உள்ள காலப் பெயர் யாது? ………………………………………

5) பந்தியில் உள்ள வினையடை யாது? ………………………………………

6) பந்தியில் உள்ள நிகழ்காலச் சொல் எது? ………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

இந்த ஆகாயம் கடலைப் போல தோன்றுகின்றது. அந்தக் கடலிலே வெள்ளியாற் செய்த தோணி ஒன்று மிதந்து செல்வதைப் போல சந்திரன் காணப்படுகின்றது.வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலில் உள்ள மீன்களைப் போல பரவுகின்றன.இந்த அழகிலே மனம் மகிழ்கிறது.சந்திரன் உதயமாகும் போது தாமரை மலர்கள் துன்பமடைகின்றன. ஆம்பல் மலர்கள் மலர்ந்து மகிழ்ச்சியடைகின்றன. சந்திரனுக்கு நண்பர் பகைவர் உளரோ? ஒருவர் துன்பமடைய மற்றொரவர் இன்பமடைவது உலக நியதியே ஆகும்.

1) ‘**எதிரி**’ என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ………………………………………

2) மலர என்பது எவ்வகைப் பெயர்ச் சொல்லாகும்? ………………………………………

3) பந்தியில் உள்ள உவமை ஒன்றை எழுதுக? ………………………………………

4) இங்கு குறிப்பிடப்படும் பொழுதில் மலரும் பூ எது? ………………………………………

5) பந்தியில் உள்ள வினா வாக்கியம் எது? ………………………………………

6) பந்தியில் உள்ள எதிர்க்கருத்துச் சோடிச் சொல் எது? ………………………………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே மஞ்சள் நிறப் பந்து போல மெதுவாக மேலெழத் தொடங்கினான்.கடிகாரப் பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்தன.ஆலயங்களின் கண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்க கூட்டங் கூட்டமாக பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.நீல வானைச் சென்நிறமாக்கிய கதிரவனின் பொற் கதிர்களால் இலையின் நுனியில் பனித்துளிகள் வைரங்களாய் மின்னின.**

1) **'பறவை'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………
2) பந்திலுள்ள குணப் பெயரை எழுதுக? ……………………………………………
3) பந்தியில் உள்ள உவமைத் தொடர் ஒன்றை எழுதுக? ……………………………………………
4) இங்கு குறிப்பிடப்படும் அடுக்குத் தொடர் எது? ……………………………………………
5) பந்தியில் உள்ள ஒலி மரபுச் எது? ……………………………………………
6) பந்தியில் உள்ள கடிகாரப் பறவைகள் எவை? ……………………………………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**சின்னத்தம்பிப் புலவர் அனைவராலும் பாரட்டப்பட்ட ஈழ நாட்டின் பெரும் புலவர் ஆவார்.வில்வராய முதலியார் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெரும் பிரபுவும் தமிழ்ப் புலவரும் ஆவார்.அவருடைய புதல்வரே சின்னத்தம்பிப் புலவர்.இவர் இளமையிலே கவிபாடும் வல்லமை பெற்றிருந்தார். இவர் கல்வளையந்தாதி, மறைசையந்தாதி,கரவை வேலன் கோவை,பறாளைவிநாயகர் பள்ளு போன்ற நூல்களை எழுதியுள்ளார்.**

1) **'ஆற்றல்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………
2) முதுமை என்பதன் எதிர்க்கரத்தச் சொல் எது? ……………………………………………
3) பந்தியில் உள்ள இரட்டைக் கொம்பும் அரவும் சங்கிலிக் கொம்பும் உள்ள சொல் எது ……………………
4) புதல்வன் என்பதன் எதிர்ப்பாற் சொல் எது? ……………………………………………
5) இருநூறு என்பதனைப் பிரித்து எழுதுக ……………………………………………
6) நூல்களை என்பதன் ஒருமை வடிவத்தை எழுதுக? ……………………………………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**எமது நாட்டில் பல்வேறு பண்டிகைகள் காலத்துக்குக் காலம் கொண்டாடப்படுகின்றன. இலங்கை பல்லலின மக்களையும் பல சமயங்களையும் கொண்ட நாடாகும். அந்த வகையில் தைப்பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பு, நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், பொசன்,வெசாக், நத்தார், ஈஸ்ட்டர் போன்ற பண்டிகைகைகளைக் குறிப்பிடலாம்.ஒவ்வொரு பண்டிகைகளும் அதற்கே உரிய பின்னணி வரலாறுகளோடு கொண்டாடப் படுகின்றன.இவை தன்னம்பிக்கை, நல்லுறவு, பொறுமை, பெரியோரை மதித்தல், ஒற்றுமை போன்ற நல்லொழுக்க விருத்திக்கு ஆதாரமாக அமைகின்றன.**

1) **'தேசம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………
2) பந்தியிலுள்ள காலப் பெயரை எழுதுக ……………………………………………
3) பந்தியில் உள்ள உயர்திணைத் தன்மைப் பன்மைச் சொல் எது? ……………………………
4) இதில் உள்ள வினைச் சொற்கள் இரண்டு எழுதுக ……………………………………………
5) பந்தியில் குறிப்பிடப்படும் மாதம் எது? ……………………………………………
6) எமது நாட்டில் கொண்டாடப்படும் பண்டிகைகள் 3 எழுதுக ……………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

புராதன மக்களால் கட்டப்பட்ட கட்டடங்கள், வணக்கத் தலங்கள் , சிற்பங்கள் உபகரணங்கள், சின்னங்கள்போன்ற தொன்மையான பொருட்களும் அகழ்வாராச்சியின் போது கண்டெடுக்கப்படும் சிலைகள், நாணயங்கள் ,கல்வெட்டுகள்,சிதைவுகள் என்பனவும் தொல் பொருட்களாகும். இவை எமது தேசிய சொத்துக்களாகும்.ஒவ்வொரு தொல் பொருளும் எமது நாட்டின் வரலாற்றைக் குறிக்கின்றவையாகக் காணப்படுகின்றன. இவை தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தினால் பாதுகாக்கப்படுகின்றன. எனவே நாமும் இவற்றைப் பாதுகாப்போம்.

1) **'பழமை'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? …………………………………………………

2) பந்தியில் உள்ள பெயர்ச் சொற்கள் 3 எழுதுக …….…………………….…………………

3) இங்கு உள்ள உயர்திணைப் படர்க்கைப் பன்மைச் சொல் எது? …………………………………….

4) பாதுகாப்போம் எனும் சொல் குறிக்கும் காலம் எது? ……………………….……….

5) தொல்பொருட்கள் 3 தருக ……………………………………………..

6) தொல் பொரட்களைப் பாதுகாக்குகம் அமைப்பு எது? ……………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மழையைப் பெறுவதற்கு மனிதனுக்கும் பிற உயிர்கள் வாழ்வதற்கும் காடுகள் அவசியமாகின்றன. மனிதன் விவசாயத் தேவைக்காகவும் பிற தேவைகளுக்காகவும் காடுகளை அழிக்கின்றான். இதனால் விலங்குகளும் பறவைகளும் தமது வாழ்விடத்தை இழக்க நேரிடுகின்றது.காடழிப்புக் காரணமாக காலநிலையில் மாற்றம், நீர்ப் பற்றாக்குறை சூழல் மாசடைதல் , மழையின்மை , என்பன ஏற்படுகின்றன. காடுகளை அழிப்பபது எம்மை நாமே அழிப்பது போன்றதாகும். எனவே நாம் காடுகளைப் பாதுகாக்க வேண்டும்

1) **'மழை'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ………………………………………………

2) 'வாழ்விடத்தை' என்பதன் பன்மை வடிவம் யாது? ……..…………..……………………

3) இங்கு உள்ள உயர்திணைப் படர்க்கைப் பன்மைச் சொல் எது? …………………………………….

4) பாதுகாப்போம் எனும் சொல் குறிக்கும் காலம் எது? ……………………….……….

5) தொல்பொருட்கள் 3 தருக ……………………………………………..

6) தொல் பொருட்களைப் பாதுகாக்குகம் அமைப்பு எது? ……………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பழங்களில் பல வகை உண்டு.மா,பலா,வாழை என்பன முக்கனிகளாகும்.பொதுவாகக் கீரைகள் எமது இரத்தத்தைத் தூய்மைப் படுத்துவது போல பழங்களும் இரத்த்தைத் தூய்மை செய்கின்றன.இது மட்டுமன்றி உணவைச் சமிபாடடையச் செய்கின்றன.ஆகவேதான் உணவுடன் பழங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.இதன் மூலம் நாம் ஆரோக்கியத்துடன் நோயின்றியும் வாழ்வோம்.

1) **'சுத்தம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………

2) 'முக்கனிகள் என்பதனைப் பிரித்து எழுதுக ……..………..…………..……………

3) பழங்களினால் ஏற்படும் நன்மை யாது?? ………………………..…………………

4) முக்கனிகள் எவை? ……………………..…………………

5) பந்தியில் உள்ள தன்மைப் பன்மைச் சொல் எது? ……………………………………………..…

6) உண்டு என்பதன் எதிர்ப்பதம் எது? ………………………………………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**கருத்துப் பரிமாற்றத்திற்கு தகவல் தொடர்பு மிக அவசியமாகும்.எந்த அறிவியல் வளர்ச்சியும் இல்லாத காலங்களில் வேலையாட்கள்தான் செய்தி கொண்டு செல்லப் பயன்படுத்தப்பட்டார்கள்.அவர்கள் நடந்தும் குதிரைகளில் பயணம் செய்தும் செய்திகளைக் கொண்டு சென்றனர். அரசனக்கு, அரசன் அனுப்பும் செய்திகளைக் கொண்டு செல்பவர்கள் 'ஓலைதாங்கிகள்' என அழைக்கப்பட்டனர்.**

1) **'பருவம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ………………………………………………
2) 'வேலையாட்கள்' என்பதன் ஒருமை வடிவம் யாது? ……..………………..………………
3) இங்கு உள்ள அ்ஃறிணைப் படர்க்கைப் பன்மைச் சொல் எது? ……………………………………….
4) 'அரசி' என்பதன் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக ………………….……………….………
5) ஓலைதாங்கிகள் என்றால் யாரைக் குறிக்கும்? …………………………………………………
6) வேலயைாட்கள் எவ்வாறு செய்திகளைக் கொண்டு சென்றனர்? ……………………………………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**இன்று உலகில் நவீன பல தொடர்பு சாதனங்கள் உள்ளன. அவற்றுள் செல்லிடப் பேசியும் ஒன்றாகும். விதம் விதமான செல்லிடப் பேசிகள் தொடுதிரைச் செல்லிடப் பேசிகள் இணையத்தள இணைப்புடன் கட்செவி அஞ்சல், முகநூல் என மக்களை ஈர்ந்துவவிட்டது.மொத்தத்தில் செல்லிடப்பேசி என்பது ஒரு தகவல் கருவியே என்பதனை நினைவிற்கொண்டு பணி புரியும் இடங்களிலும் பொது இடங்களிலும் அளவுடன் தேவைக்கேற்பப் பயன்படுத்தி எந்த வகையிலும் மற்றவருக்கு இடையூறு செய்யாமல் நம்மைக் காத்துக் கொள்வதே புத்திசாலித்தனமாகும்.**

1) **'புதிய'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………………
2) 'வாழ்விடத்தை' என்பதன் பன்மை வடிவம் யாது? ……………………………..……………………
3) **'மக்கள்'** என்பது எவ்வகை இடப் பெயராகும்? ……………………………………………………….
4) இதில் உள்ள சினைப் பெயர் யாது? ……………………………….……………………………
5) இதில் சங்கிலிக் கொம்பும் கீழ்காலும் சுழியும் உள்ள சொல் எது? ……………………………………..
6) **'இன்று'** என்பதன் இறந்தகால வடிவம் யாது? …………………………………………………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள் இன்று நம் வீடுகளில் மின்விளக்குகள் எரிகின்றன. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்குமிழைக் கண்டு பிடித்தார். ஆரம்பத்தில் தோல்வி கண்டாலும் பின்னர் வெற்றி கண்டார். 'முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு அமைவாக அவரது முயற்சியால் இன்று வீடுகளில் மின்குமிழ் எரிகின்றன.**

1) **'தொடக்கம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ………………………………………………………
2) வெற்றிக்கு ஏணிப்படிகள் எவை? ……..…………………….…..……………………
3) இதில் உள்ள முதுமொழி யாது? …………………..……………………………….
4) பந்தியில் உள்ள இடப் பெயர் யாது? ………………….……….………………….……….
5) நூற்றாண்டு என்பதனைப் பிரித்து எழுதுக ……………………………………………………………
6) இங்கு குறிப்பிடப்பபடும் பன்மைச் சொற்கள் 2 எழுதுக ……………………………………….……….

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**நெல்லியில் முழு நெல்லி, அரை நெல்லி என இரு வகைகள் உண்டு. நெல்லி, கனி வகையைச் சேர்ந்தது என்றாலும், நாம் காய் என்றும் அழைக்கிறோம். நெல்லிக்காயில் விற்றமின் சி.பி. தாமிரம், கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் மாங்கனீசு, புரதம், சுண்ணாம்புச் சத்து, நீர்ச்சத்து, இரும்புச் சத்துகள் இருக்கின்றன. நெல்லிக்காயை பழரசம், ஊறுகாய், துவையல் என எந்த வடிவத்தில் சாப்பிட்டாலும். அதில் உள்ள விற்றமின்கள் அழியாது. வேக வைத்தாலும், காய வைத்தாலும் அதில் உள்ள விற்றமின்கள் அழியாத் தன்மை கொண்டவை. புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு சுவை கொண்டது. இதனால் மத்திய காலத்தில் காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்கும் மருந்தாக இதைப் பயன்படுத்தினார்கள்.**

1) **'ஔடதம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) பந்தியில் உள்ள எதிர்கருத்துச் சோடிச் சொற்கள் எவை? ……..……………………………………….

3) இதில் உள்ள இறந்தகால வினை வடிவம் எது? ………………………………..……………

4) நெல்லிக்காய் எதற்கு மருந்தாக அமைகின்றது? ……………………………..…………………

5) நெல்லியின் வகைகள் எவை? ………………………………….…………………

6) இங்கு குறிப்பிடப்பபடும் சுவைகள் எவை? …………………………………..……………….

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**வீட்டின் ஜன்னல்களில், மொட்டை மாடிகளில் சுற்றித்திரிந்த அழகிய சிட்டுக்குருவிகள் இனம் இன்று அருகி, அழிவின் விளிம்பில் உள்ளன. கடந்த 25 ஆண்டுகளில் 60 சதவீத சிட்டுக்குருவிகள் அழிந்துவிட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. காலம் மாறியது. காலனாக கைப்பேசிகள் வந்தன. கைப்பேசி அலைகள் சிட்டுக்குருவி இனத்தை அழித்தன. நாள்தோறும் தமது வாழ்வுக்காக அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி அதன் மூலம் அவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் மார்ச் 20 ஆம் திகதியன்று (2010 ஆம் ஆண்டிலிருந்து) உலக சிட்டுக்குருவிகள் நாளாக நினைவுகூரப்படுகிறது.**

1) **'காலன்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) அழிவு என்பதன் எதிர்க்கருத்தினை எழுதுக ……….…………………………………………

3) இதில் உள்ள பெயரடை எது? ………………………………..……………..……………

4) பந்தியில் உள்ள காலப் பெயர் எது? ……………………………..………………………

5) விழிப்புணர்வு என்பதனைப் பிரித்து எழுதுக ……………………………..……………………

6) சிட்டுக் குருவிகள் தினம் எப்போது நினைவுகூரப்படுகிறது? ………………………..…………………

❖ **பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பலாமரம் நிழல் தருகிறது. பறவைகளும் பிராணிகளும் உறைகின்றன. காற்றின் அதீத வேகத்தைக் காட்டுப்படுத்துகிறது. வேர்களோ நில அரிப்பைத் தடுத்து மண்ணின் ஈரத்தன்மையைப் பேணுகின்றன. தவிர, உணவாகவும், கட்டையாகவும் பயன்படுகிறது. எத்தனை பயன்கள்! இலைகள் ஆடுகளுக்கு உணவாகின்றன. வீடு கட்டவும், மரப்பொருட்கள் செய்யவும் மரத்தை உபயோகப்படுத்துகிறோம்... பலாக்காயை இரண்டு விதங்களில் சமைக்கலாம். பழங்களையும் கொட்டைகளையும் நீரிலோ அல்லது ஆவியிலோ வேகவைத்துத் தேங்காயுடன் கலந்து உண்ணலாம். குழம்பாகவும் இதைச் சமைக்கலாம்.எனவே பயன் தம் பலாவைப் பாதுகாப்போம்.**

1) **'பயன்கள்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) பந்தியில் உள்ள பொருள் பெயர் உன்று எழுதுக? ……..………………………………….……

3) இதில் உள்ள இறந்தகால வினை வடிவம் எது? ………………………………..……………

4) பந்தியில் உள்ள அ.ஃ.றிணைப் பன்மைச் சொல் எது? ……………………………..…….………

5) 'உறைகின்றன' என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? ……………………………………

6) பலாமரத்தின் பயன் ஒன்று தருக ………………………………..……………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**நான் ஆகாயத்தில் பறப்பேன். ஆகாயத்தில் முகில்களுக்கு இடையேயும் நான் சிலவேளைகளில் பறக்கின்றேன். சிறகுகளை அசைக்காமல் என்னால் பறக்கத்தக்கதாக இருத்தல் புதுமையான விடயமாகும். நான் பறக்கும் போது சத்தம் உண்டாகின்றமையால் கீழே உள்ளவர்கள் நான் ஆகாயத்தில் பறப்பதை அறிந்து கொள்வர். விசேடமாகச் சிறிய பிள்ளைகள் என்னைப் பார்த்து மகிழ்ச்சியடைவதை நான் அறிவேன். நான் மரங்களில் தங்கியிருப்பதில்லை. நான் விசேட இடங்களில் மாத்திரம் இறங்குவேன்.**

1) **'வானம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) பந்தியில் உள்ள சினைப் பெயர் எது? ……………………………………………………

3) அறிவேன் என்பது குறிக்கும் காலம் யாது? ……………………………………………………

4) பந்தியில் உள்ள அஃறிணைப் பன்மைச் சொல் எது? ……………………………………………………

5) எது புதமையான விடயமாகும்? ……………………………………………………

6) இங்கு எது தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறது? ……………………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**நான் பல்வேறு நிறங்களைக் கொண்டுள்ளேன். சிலவேளைகளில் சிவப்பாக இருப்பேன்.கபில எனக்கு நிறமே இல்லை. சில விசேட சந்தர்ப்பங்களில மனிதர்கள் என்னைக் குடிப்பர். என்னைக் குடிப்பதன் மூலம் மனிதர்களுக்கு நன்மையன்றித் தீமை ஏற்படுவதில்லை.எனினும் பெரும்பாலானவர்கள் விருப்பமின்றி என்னைக்குடிப்பதை நான் அறிவேன் விசேடமாகச் சிறுபிள்ளைகள் என்னைக் குடிக்க விரும்புவதில்லை.**

1) **'தீமை'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) பந்தியில் உள்ள உளர்திணைத் தன்மை ஒருமைச் சொல் எது? ……………………………………………

3) பந்தியில் உள்ள பெயரடை ஒன்றை எழுதுக ……………………………………………………

4) மனிதர்கள் என்பத்ன் ஒருமை வடிவத்தை எழுதுக ……………………………………………………

5) விசிறியும் சுழியும் உள்ள சொல்லை எழுதுக ……………………………………………………

6) இங்கு எது தன்னைப் பற்றிக் குறிப்பிடுகிறது? ……………………………………………………

❖ பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

**கடம் கர்நாடக இசையுடன் தொடர்புடைய தாள வாத்தியக் கருவிகளில் ஒன்றாகும். இது மிக எளிமையான ஓர் இசைக்கருவி ஆகும். இது ஒரு பெரிய மண்பானையில் தட்டுவதன் மூலம் ஒலி எழுப் பப்படும் இசைக் கருவியாகும். குட இசைக்கலைஞர்கள் அமர்ந்த நிலையில் கடத்தின் வாயைத் தன் வயிற்றோடு ஒட்டவைத்துக் கொண்டு இரண்டு கைகளாலும் அடித்து வாசிப்பார். நாதஸ்வரம் துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக்கருவியாகும். இது நாயனம் என்று பலவாறு அழைக்கப்படுவது உண்டு. திறந்த இடத்தில் இசைப்பதற்கு ஏற்றது. வெகு தூரத்தில் இருந்து கேட்டாலும் இன்பத்தைத் தரும் இயல்பினைக் கொண்டது.**

1) **'மகிழ்ச்சி'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) பந்தியில் உள்ள உளர்திணைத் தன்மை ஒருமைச் சொல் எது? ……………………………………………

3) பந்தியில் உள்ள வினையடை ஒன்றை எழுதுக ……………………………………………………

4) இங்கு உள்ள சினைப் பெயர்கள் எவை? ……………………………………………………

5) பந்தியில் குறிப்பிடப்படும் துளை கருவி எது? ……………………………………………

6) **கடம்** எந்த இசையுடன் தொடர்புபடையது? ……………………………………………

❖ பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| இருவிளக்கில் ஒரு விளக்காம் வெண்ணிலாவே<br>இராக்காலத் தொளிகொடுப்பாய் வெண்ணிலாவே<br>சூரியன்போய் மறைந்தபின்பு வெண்ணிலாவே<br>தூயவொளி பரப்பிடுவாய் வெண்ணிலாவே | தயிர்க்கடலில் வெண்ணெய்போல வெண்ணிலாவே<br>தனிவிசும்பிற் றவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே<br>பெண்கள் முகம் போல்வருவாய் வெண்ணிலாவே<br>பிறையாகி வளர்ந்திடுவாய் வெண்ணிலாவே |
| எண்ணிரண்டு கலையுடனே வெண்ணிலாவே<br>எழுந்துநிலாப் பொழிந்திடுவாய் வெண்ணிலாவே<br>வளர்ந்துபின்பு தேய்ந்திடுவாய் வெண்ணிலாவே<br>வறுமைசெல்வ முனக்குமுண்டோ வெண்ணிலாவே | ஒரு நாளில் மறைந்திடுவாய் வெண்ணிலாவே<br>ஒளியின்றி வாடுவமே வெண்ணிலாவே<br>அமுதவொளி பரப்பிவரும் வெண்ணிலாவே<br>அன்புடனே வாழியென்றும் வெண்ணிலாவே |

1) **'விசும்பு'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) வறுமை என்பதன் எதிர்க்கருத்து யாது? ……………………………………………………

3) பாடலில் உள்ள உவமைத் தொடர் யாது? ……………………………………………………

4) பாடலில் குறிப்பிடப்படும் இரு விளக்குகள் எவை? ……………………………………………………

5) பெண்ணின் முகம் போல வருவது எது? ……………………………………………………

6) **அமுதம் + ஒளி** என்பதைச் சேர்த்து எழுதுக ……………………………………………………

❖ பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | |
|---|---|---|
| குடைபிடித்து செருப்புமிட்டு<br>புத்தகமும் கொண்டு<br>குடுகுடென நடந்து வரும்<br>குழந்தைகளே கேளீர் | மழைக்காலம் வழி வழுக்கும்<br>மிகக் கவனம் மக்காள்<br>வழியருகே வெள்ளமுண்டு<br>விலகிவர வேண்டும். | அம்மா சொல்லைத் தட்டாமல்<br>ஆசிரியர்க் கடங்கி<br>ஆசையுடன் பள்ளியிலே<br>படித்துவர வேண்டும். |

1) **'அன்னை'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) **விருப்பு** என்பதன் எதிர்க்கருத்து யாது? ……………………………………………………

3) பாடலில் உள்ள இரட்டைக் கிளவி எது? ……………………………………………………

4) பாடல் யாரை விளித்துப் பாடுவதாக உள்ளது? ……………………………………………………

5) பாடலில் உள்ள உயர்திணைப் பெண்பால் ஒருமைச் சொல் எது? ……………………………………………………

6) பாடலில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல் யாது? ……………………………………………………

❖ பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| மலையில் வந்து முகில்கள் கூட<br>வண்ண மயிலும் ஆடுது<br>அழகுத் தோகை விரித்து நின்றே<br>ஆனந்தமாய் ஆடுது. | கோல மயிலின் கூத்தைக் கண்டு<br>குரங்கு தாளம் போடுது<br>கொப்புப் கொப்பாய் தாவிப்பாய்ந்து<br>குரங்கு தாளம் போடுது |
| வானம்பாடி மயிலின் கூத்தை<br>வாழ்த்திப் பாட்டுப் பாடுது<br>வண்ணணக் கிளியும் வந்திருந்து<br>மயிலின் கூத்தைப் பார்க்குது | கொல்லும் வேடன் வில்லும் நழுவ<br>கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்<br>குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு<br>குதித்து குதித்து நடிக்கிறாள் |

1) **'குரங்கு'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………

2) பாடலில் உள்ள **அழகு** எவ்வகை அடைமொழியாகும்? ……………………………………………………

3) பாடலில் உள்ள அடுக்குத் தொடரை எழுதுக ……………………………………………………

4) பாடலில் எது தாளம்போடுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது? ……………………………………………………

5) பாடலில் உள்ள வேட்டையாடும் உபகரணம் எது? ……………………………………………………

❖ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**சிறகை விரிக்கும் பறவையே**
**சீக்கிரத்தில் பறக்கலாம்**
**மரத்தில் ஏறும் மனிதனே**
**மாம்பழத்தைப் பறிக்கலாம்**

**கொத்தும் குப்பைக் கோழியே**
**கொத்தி உணவை உண்ணலாம்**
**கத்திக் கரையும் காக்கையே**
**காக்கைக் கூட்டம் சேர்க்கலாம்**

**நடந்து செல்லும் மனிதனே**
**நாடும் இடத்தை அடையலாம்**
**முடங்கிப் படுக்கும் சோம்பலால்**
**முடிவ துண்டோ எதுவுமே?**

**தேடித் தேடிப் படிப்பவர்**
**தெளிந்த அறிவை அடையலாம்**
**ஓடி ஓடி உழைப்பவர்**
**உயர உயர வாழலாம்**

1) **'அறிவு'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………
2) சுறுசுறுப்பு என்பதன் எதிர்ப்பதம் யயாது? ……………………………………………………
3) பாடலில் உள்ள அடுக்குத் தொடரை எழுதுக ……………………………………………………
4) பாடலில் உள்ள ஒலி மரபுச் சொல் எது? ……………………………………………………
5) எவ்வாறு தெளிந்த அறிவு கிடைக்கிறது? ……………………………………………………
6) பாடலில் உள்ள பெயரடை எது? ……………………………………………………

❖ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**வண்ண வண்ண சோலைதனிலே**
**வளரும் செடிகள் நிச்சயம்**
**வளரும் செடிகள் மீதினிலே**
**மலர்கள் உண்டு நிச்சயம்**

**கொண்டு சென்ற தேனையே**
**கூட்டில் சேர்த்தல் நிச்சயம்**
**கூடு தன்னை மாந்தர்கள்**
**குலைத்து விடுதல் நிச்சயம்**

**மலர்கள் தம்மைத் தேடியே**
**வண்டு வருதல் நிச்சயம்**
**வண்டு தேனை வாரியே**
**கொண்டு போதல் நிச்சயம்**

**அழகு மிக்கக் கூட்டினை**
**அழித்து நல்ல தேனையே**
**அடைய வேண்டின் அழியுமே**
**ஆயிரம் உயிர் நிச்சயம்**

1) **'பொழில்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………
2) மலர்கள் என்பது எவ்வகைப் பெயர்ச் சொல்லாகும்? ……………………………………………………
3) பாடலில் உள்ள உயர்திணைப் படர்க்கைப் பன்மைச் சொல் எது? ……………………………………
4) பாடலில் உள்ள பெயரடை யாது? ……………………………………………………
5) வண்டு எதனை வாரிச் செல்கிறது? ……………………………………………………
6) பாடலில் உள்ள எண் பெயர் யாது? ……………………………………………………

❖ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**எள்ளினும் சிறிய எறும்பைப்பார்- அது**
**எதையும் இழுத்துச் செல்வதைப் பார்**
**உள்ளம் கொண்ட ஊக்கத்தால் - அது**
**உன்னையும் கூட இழுத்துவிடும்**

**ஊக்கத்தோடு உழைத்துவிடு – நீ**
**உயர்வு பெறுவாய் இது உண்மை**
**நோக்கம் யாவும் நிறைவேறும் - உனை**
**நோக்கி உலகம் கைகூப்பும்.**

1) **'மனம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………………
2) **மெய்** என்பதன் எதிர்க்கருத்து யாது? ……………………………………………………
3) எதைவிட எறும்பு சிறியது எனக் குறிப்பிடப்படுகின்றது?? ……………………………………………
4) பாடலில் எதனால் உயர்வு பெறலாம் எனக் குறிப்பிடப்படுகின்றது?…………………………………
5) உனை நோக்கிக் கை கூப்புவது எது? ……………………………………………………
6) பாடலில் உள்ள முன்னிலை ஒருமைச் சொல் எது? ……………………………………………………

❖ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | |
|---|---|---|
| **உயிர்களை நேசித்தால்<br>உண்மையன்பு கிடைத்திடுமே!<br>மனிதநேயம் ஒளிர்ந்திட்டால்<br>மாண்புதனை உயர்த்திடுமே !** | **சுகாதாரம் பேணிட்டால்<br>சுகவாழ்வு அமைந்திடுமே!<br>இயற்கையுணவு உண்டிட்டால்<br>இனியவாழ்வு மலர்ந்திடுமே!** | **மரங்களை வளர்த்திட்டால்<br>மண்ணரிப்பு தடைப்படுமே!<br>வனங்களைக் காத்திட்டால்<br>வெம்மையும் தணிந்திடுமே!** |

1) **'உயிர்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………

2) பாடலில் உள்ள மரங்கள் அதிகமாகக் காணப்படும் இடத்தின் பெயர் யாது? …………………………..

3) சுக வாழ்வு அமைந்திட என்ன செய்ய வேண்டும்? ……………………………………………

4) இயற்கை உணவினை உண்டால் மலர்வது யாது? ……………………………………………

5) மண்ணரிப்பைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்? ……………………………………………

6) உண்மையன்பு எவ்வாறு கிடைப்பதாகப் பாடலில் குறிப்பிடப்படுகின்றது? …………………………………

❖ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | | |
|---|---|---|
| **சின்னச் சின்ன நுங்கு<br>செங்க ரும்பு நுங்கு<br>தின்னத் தின்ன இனிக்கும்<br>திகட்டி டாத நுங்கு!** | **தாகம் தீர்க்கும் நுங்கு<br>தண்ணீர் போல நுங்கு<br>தேகச் சூடு நீங்கச்<br>செய்யும் சின்ன நுங்கு!** | **நுங்கை வெட்டித் தின்றேன்<br>நுங்கு வண்டி செய்தேன்<br>நுங்கு வண்டி செய்தே<br>நுட்பம் ஒன்றைக் கண்டேன்!** |

1) **'தேகம்'** என்பதன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………

2) பாடலில் உள்ள அடுக்குத் தொடர் யாது? ……………………………………………..

3) பாடலில் குறிப்பிடப்படும் சின்ன நுங்கின் பயன் ஒன்றை எழுதுக? ……………………………………

4) பாடலில் உள்ள உவமை யாது? ……………………………………………

5) **செங்கரும்பு** என்பதனைப் பிரித்து எழுதுக ……………………………………………..

6) **'உண்ணுதல்'** என்பதற்குச் சமமான மற்றுடிமாரு சொல்லை எழுதுக ……………………………………

❖ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | |
|---|---|
| **சிங்கத்தின் வீட்டில் கொண்டாட்டம்<br>சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்<br>சிலந்தி கட்டும் வெள்ளை<br>குரங்கு கட்டும் மாலை** | **பாட்டுப் பாடும் குயில்கள்<br>நாட்டியம் ஆடும் மயில்கள்<br>பன்னீர் தெளிக்கும் யானை** |
| **ஒட்டகம் கொட்டகை ஆக்கும்<br>சிவிங்கி சரங்கள் தூக்கும்<br>கரடி கொட்டும் மேளம்<br>குதிரை தட்டும் தாளம்** | **சந்தனம் கொடுக்கும் பூனை<br>மான்கள் பாயை விரிக்கும்<br>முயல்கள் அழைத்துச்<br>சிரிக்கும்.** |

1) **'சிரிப்பு'** என்தன் ஒத்த கருத்துச் சொல் எது? ……………………………………………

2) பாடலில் உள்ள பறவைகள் எவை?? …………………………………………..

3) வருவர்களை அழைத்துச் சிரிப்பவை யாவை? ……………………………………………

4) எதிர்கால வினைச் சொற்கள் இரண்டு எழுதுக ……………………………………………

5) பாடலில் உள் குணப் பெயர் எது? ……………………………………………

6) பெரிய + கூட்டம் என்பதனைச் சேர்த்து எழுதுக ……………………………………………

**பின்வரும் பாடல்களின் இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.**

1)

வாத்தியங்களை இசைத்திடாமல்
………………… கேட்டிடலாம்.
ஊரெங்கும் போய் வராமல்
………………… கேட்டிடலாம்.

அறிஞர்களைச் சந்திக்காமல்
……………… கேட்டிடலாம்.
உலகமெங்கும் சுற்றிடாமல்
………………… கேட்டிடலாம்.

விழாக்களுக்குச் சென்றிடாமல்
……………… கேட்டிடலாம்.
கேட்டிடலாம் கேட்டிடலாம்
……………… இருந்திடலாம

2)

குடைபிடித்து ……………………
புத்தகமும் கொண்டு
…………………… நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்

கண்மணிகாள் ……………………
காலில் வரும் கவனம்
கண்ணுறக்க மில்லாமற்
…………………… நேரும்

அம்மா ……………………
தட்டாமல்
ஆசிரியர்க் கடங்கி
…………………… பள்ளியிலே
படித்துவர வேண்டும்.

3)

சின்னச் சின்ன நுங்கு
…………………… நுங்கு
தின்னத் தின்ன
……………………
திகட்டி டாத நுங்கு!

…………………… தீர்க்கும்
நுங்கு
…………………… போல நுங்கு
தேகச் சூடு நீங்கச்
செய்யும் சின்ன நுங்கு!

நுங்கை வெட்டித் ……………………
நுங்கு …………………… செய்தேன்
நுங்கு வண்டி செய்தே
…………………… ஒன்றைக் கண்டேன்

4)

ஒரு மரமேனும் நான் நட்டு - என்
…………………………… போல பேணிடுவேன்!
ஒரு வர்க் கேனும் சிறு உதவி - நான்
…………………………… செய்திடுவேன்!

படிப்பறி வில்லா மாந்தர்க்கு - என்
படிப்பால் …………………………… புரிந்திடுவேன்!
துடிக்கும் …………………………… துயர்
துடைக்க - நான்
தூங்கா திருந்து ……………………………

5)

தையும் பிறந்தது கும்மியடி-நீ
………… சிறக்கக் கும்மியடி
தை ………என்றே கும்மியடி-நீ
……………. என்று கும்மியடி

………… வந்தது கும்மியடி-நீ
சிறப்புடன் ………. கும்மியடி
…………………கும்மியடி நீ
சிட்டுப் ………….. கும்மியடி

………… பிந்தது கும்மியடி நீ
ஆடி……………. கும்மியடி
ஆடிப் பெருக்கில் ……………
………………….. கும்மியடி

6)

தென்னந் தோப்பு மூலையில்
……………. ஒன்று விழுந்தது
தூகக்ககம் கலைந்த ……….
…………… தூக்கிப் பார்த்தது

பூனை ……………… வந்தது
…………. புரட்டிப் பார்த்தது
…………… பிடித்து நின்றது
உருட்டி விட்டு …………………

காலை ……………..… வரை
…………… அங்கு கிடந்தது
……….வைத்த செம்பு போல
வானனம் ……………………

7)

என்னால் இது செயய்ய முடியாது – எனும்
…………… பேச்சை விட்டுவிடு
என்னனல் எது செயய்ய முடியாது – எனும்
ஏற்ற …………………… கேட்டுவிடு

எள்ளிலும் சிறிய …………………… அது
…………………… இழுத்துச் செல்வதைப்பார்
உள்ளம் கொண்ட ………………… அது
உன்னையும் கூட …………………………..

புல்லும் வெளியே ………………… இப்
பூமியைத் ………………………வழிகாணும
…………… அதனால் இடம் பெயரும் -அதன்
காரணம் ……………………… உழைப்பாகும்

……………………… உழைத்துவிடு – நீ
……………………பெறுவாய் இது உண்மை
நோக்கம் யாவும் …………………உன்னை
நோக்கிக் …………………………. $g;Gk;